මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல. PRE/2024/50 2024.08.27

## சனாதிபதித் தேர்தல் - 2024

## உடல் வலிமையிழப்பிற்குட்பட்டவர்களால் விசேட போக்குவரத்து வசதிகளைக் கோரல்

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் சட்டத்தின் 82 (4) (ஈ) ஆம் பிரிவின் பிரகாரம், உடல் வலிமையிழப்பிற்குட்பட்ட எவரேனுமொருவர் கால்நடையாகவோ, இலங்கை பொதுப் போக்குவரத்து சாதனமொன்றிலோ தமது வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்வதற்கு முடியாதவராக இருப்பின், குறித்த வாக்களிப்பு நிலையத்திற்குப் போய்வருவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக தங்களது பிரதேசத்திற்குரிய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரிடம் தானாகவோ அல்லது தனது சார்பாக மற்றொருவரோ, குறித்த நபர் வேட்பாளர், தேர்தல் முகவர், அதிகாரம் பெற்ற முகவர், பிரதேச முகவரொருவராக அல்லாத வேறொருவரினால் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்க முடியும்.

02. இந்த வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை மாவட்டத் தேர்தல் அலுவலகங்களிலும், பிரதேச செயலகங்களிலும், கிராம அலுவலர் அலுவலகங்களிலும் அல்லது www.elections.gov.lk இணையத் தளத்திலும் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை தேர்தல் தினத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்பாக அதாவது 2024 செப்தெம்பர் மாதம் 14 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ உரிய தெரிவத்தாட்சி அலுவலரிடம் (மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர்) அல்லது மாவட்ட பிரதி அல்லது உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்குச்(மாவட்டத் தேர்தல் அலுவலகம்) சமர்ப்பித்தல் வேண்டும்.

03. விண்ணப்பத்தை சமர்ப்பிப்பவர், தன்னால் பொது போக்குவரத்து வசதியைப் பயன்படுத்தியோர் அல்லது கால்நடையாகவோ வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்ல முடியாதென்பதை நிரூபிக்கக்கூடியவாறு, பதிவுசெய்யப்பட்ட வைத்தியரொருவரின் (மேற்கத்தேய, உள்நாட்டு) வைத்தியச் சான்றின் மூலம் தமது விண்ணப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்டிருப்பின், தெரிவத்தாட்சி அலுவலரால் அதற்கான தீர்மானம் மேற்கொள்வதற்குப் பெரிதும் உதவியாக அமையும். உடல் வலிமையிழப்பிற்கு உட்பட்டராகவிருப்பவர், ஒரு அரச வைத்தியர், பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியர், ஆயுர்வேத வைத்தியர் ஒருவரிடம் சென்று எவ்வித கட்டணமுமின்றி தன்னை பரிசோதித்து வைத்திய சான்று வழங்குமாறு கோரமுடியும். தனியார் வைத்தியராகவிருப்பின் (மேற்கத்தேய அல்லது உள்நாட்டு) அவர் வழங்கும் சான்றிதழில் அவ்வைத்தியரின் பெயர், பதிவிலக்கம் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேர்தல் ஆணைக்குழுவால் வலிமையிழப்புக்குட்பட்ட மற்றும் பார்வையிழப்பிற்குட்பட்ட நபர்களுக்காக விநியோகிக்கப்பட்ட 10 வருடங்களுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட தற்காலிக அடையாள அட்டையுடைவர்கள் வைத்திய சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் அவசியமில்லை.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழுவுக்காக)

மாதிரி விண்ணப்பப்படிவம்

சனாதிபதித் தேர்தல்- **2024**

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்

82(4)(ஈ) ஆம் பந்தியின் கீழ் வாகனமொன்றைப் பயன்படுத்துவதற்காக உடற்றகுதியீனமுற்றுள்ள ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம்.

தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு,

(1) உடற்றகுதியீனமுற்றவரின் விபரங்கள்:

(அ) முழுப் பெயர்: ..............................................................................

(ஆ) அஞ்சல் முகவரி: ..............................................................................

(இ) தொலைபேசி இலக்கம் :- ......................................

ஈ) 2024 ஆம் ஆண்டுக்குரிய ஒருங்கிணைக்கப்பட்ட தேருநர் இடாப்பிலுள்ளவாறு பதிவு விபரங்கள்

தேர்தல் மாவட்டம் ..................... வாக்கெடுப்புப் பிரிவு,...................................

வாக்கெடுப்பு மாவட்டம்.................. தொடர் இலக்கம்(தெரியுமாயின்)..........................

(2) உடற்றகுதியீனம் பற்றிய சுருக்கமான விபரம் : ..................................................
..............................................................................................................

(3) உடல் வலிமையிழப்பிற்கு உட்பட்டவர் சார்பாக வேறு யாராயினுமொருவரினால் விண்ணப்பப்படிவம் அனுப்பப்படுமாயின் அவரது பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி மற்றும் உறவுமுறை போன்ற விபரங்கள் :
..............................................................................................................
..............................................................................................................

(4) இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உடற்றகுதியீனத்தை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க வைத்தியர் ஒருவரின்/ பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியத் தொழில் புரியும் ஒருவரின்/ ஆயர்வேத வைத்தியரொருவரின்/ தனியார் வைத்தியரொருவரின் அறிக்கை ஒன்றை இத்துடன் அனுப்பி வைக்கின்றேன்.(தேர்தல் ஆணைக்குழுவினால் உடற்றகுதியீனமுற்றவர்களுக்கு வழங்கும் தற்காலிக அடையாள அட்டை இருப்பின் அதன் பிரதியை இணைக்கவும்)

வைத்தியரின் பெயர்: ..............................................................................

பதிவிலக்கம்: ..............................................................................

(5) மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு உடற்றகுதியீனம் காரணமாக எனக்கு/ உடற்றகுதியீனமுற்றுள்ள மேலே பெயர் காணப்படுபவருக்கு நடந்து அல்லது இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை அல்லது இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் பொதுப் போக்குவரத்துச் சேவை எதனிலாலும் ஏற்பாடு செய்யப்படும் போக்குவரத்து வசதி மூலம் வாக்களிப்பு நிலையத்திற்கு போக முடியாதென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

(6) மேற்கூறப்பட்ட வாக்கெடுப்பின்போது வாக்கினைப் பிரயோகிக்கும் பொருட்டு வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய் வருவதற்கென நான்/ உடற்றகுதியீனம் உற்ற மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ளவர் ஏதேனுமொரு வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு எழுத்து மூலமான உத்தரவினை வழங்குமாறு இத்தால் கேட்டுக்கொள்கின்றேன்.

திகதி................

..................................

உடற்றகுதியீனமானவரின்/ அவருக்காக
விண்ணப்பிக்கும் வேறொருவரின் ஒப்பம்
அல்லது பெருவிரல் அடையாளம்.